1967 ஜூன் 22]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) & (உ) எவரையும் வேலையிலிருந்து நீக்கும் உத்தேசம் இல்லை. நானூற்று பதினைந்து பீல்ட்மென்கள் 1965-ம் ஆண்டில் நியமிக்கப்பட்டார்கள். 1967-ம் ஆண்டில் இந்த பீல்ட்மென் பதவிகளை இரண்டாம் நிலை கிராம நல ஊழியர் பதவிகளாக மாற்ற முடிவு செய்யப்பட்டது. இந்த 415 பேரில், கிராம சேவக் பதவிக்குத் தகுதியுடையவர்கள், அவ்வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள். தகுதி இல்லாதவர்கள், ஏற்கனவே உள்ள பீல்ட்மென் பதவிகளில் தொடர்ந்து வேலை பார்ப்பார்கள்.

திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய இந்த முடிவு பீல்ட்மென்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அத்தகைய ஆபத்தான நிலைமை இல்லாததால், அது அவசியமில்லை.

திரு. செ. பாலசுப்ரமணியன்: இந்த வேலைகளுக்கு பீல்ட்மென்களுக்கு குறுகிய கால பயிற்சி அளித்து கிராம சேவக்குகளாக அமர்த்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: நான் ஏற்கனவே அறிவித்தது போல, தகுதியுள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள்.

திரு. கே. பி. எஸ். மணி: தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் பதவி ஏற்றபிறகு பரவலாக இப்படிப்பட்ட ஊழியர்கள் பதவிகளிலிருந்து நீக்கப்படுவார்கள், அதன்பேரில் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்றும் வெளிப்புறங்களில் அரசியல் ரீதியாக சிலர் செய்துக் கொண்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிலை இருந்தால், என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அத்தகைய கிளர்ச்சிகளுக்கு ஊழியர்கள் பலியாக மாட்டார்கள்.

படகு கட்டும் திட்டம்

*51. வினா.—**திரு. கரு. சீமைச்சாமி:** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மண்டபத்தில், நார்வே திட்டத்தின் கீழ், 1966-67-ல் எத்தனை படகுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டது ?

(இ) அதில் எத்தனை படகுகள் கட்டி முடிக்கப்பட்டன?

(உ) அவற்றிற்கான செலவு தொகை என்ன?

[1967 ஜூன் 22

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்தோ--நார்வீஜியன் திட்டப்படி—

(அ) 1966-67-ம் ஆண்டில் மண்டபத்தில் உள்ள படகு கட்டும் துறையில் 32 அடி அளவுள்ள ஐம்பது படகுகளும், 43 அடி அளவுள்ள இரண்டு படகுகளும் கட்டத் திட்டமிடப்பட்டது.

(இ) 1966-67-ம் ஆண்டில் 32 அடி அளவுள்ள பதினொரு படகுகள் கட்டப்பட்டன. 32 அடி அளவுள்ள முப்பது படகுகளுக்குச் சட்டங்களை நிலையாகப் பொருத்தும் அளவில் வேலை முடிந்திருக்கிறது.

(உ) 1967-ம் ஆண்டு பிப்பரவரி திங்கள் வரையில் ரூபாய் 9,24,427.52 படகுகள் கட்டுவதற்குச் செலவிடப்பட்டது.

திரு. கரு. சிமைச்சாமி : சார், இந்தப் படகுகள் கட்டியிருப்பது கம்மியாக இருக்கிறது; ஆனால் அவற்றிற்கு ஆகியிருக்கும் செலவு அதிகமாக இருக்கிறது; 11 படகுகளுக்கு 10 லட்சம் ரூபாய் ஆகியிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? படகுகள் அதிகமாகக் கட்டாததற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்த இஞ்ஜின்கள், இன்னும் மற்ற சாமான்கள் நார்வே நாட்டிலிருந்து தரப்படுகிறது. அதனால்தான் செலவு அதிகமாக இருக்கிறது.

திரு. மு. ச. சிவசாமி: ஐயா, முந்தியிருந்த காங்கிரஸ் அரசாங்கத்திடமிருந்து, ஒரு காங்கிரஸ் உறுப்பினர் புதிய படகுகள் கட்டுவதற்கென்று ஒரு லட்சம் ரூபாய் கடன் வாங்கி, பழைய படகுகளையே புதுப்பித்து விட்டு, புதுப்படகுகள் கட்டாமல், அந்த அரசினரை ஏமாற்றியது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கேள்வி, இந்திய--நார்வே திட்டத்தின் கீழ் மண்டபத்தில் படகுகள் கட்டுவது பற்றியது. கனம் உறுப்பினர் கொடுக்கும் தகவலை எழுதியனுப்பினால், அது பரிசீலிக்கப்படும்.

THIRU T. MARTIN : Sir, will the Hon. Minister be pleased to state whether the boats so constructed have been allotted to the persons who are really fishermen or whether they have not been so far allotted?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இப்படிக் கட்டப்பட்ட படகுகள் மீனவர்களுக்குத் தரப்படுகின்றன. கூட்டுறவில் சேர்ந்து அதில் பயிற்சி பெற்றவர்களுக்குத் தரப்படுகிறது.

திரு. ந. வீராசாமி: தலைவர் அவர்களே, நார்வே நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டவை என்று இந்தியாவிலேயே செய்யப்பட்ட இயந்திரங்கள் படகுகள் கட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டன என்கின்ற செய்தி உண்மையா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அது தவறான செய்தி.

1967 ஜூன் 22]

திரு. பி. கே. மூக்கையா தேவர்: கட்டப்பட்ட படகுகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டு விட்டனவா? வேலை செய்யாமல் ஏதாவது நிறுத்தப் பட்டிருக்கின்றனவா? அப்படியானால், எத்தனை?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்தப் புதிய அரசு மார்ச் மாதம் 6-ம் தேதி பொறுப்பேற்றது. 4-ம் தேதி படகுகள் வழங்குவது பற்றி அன்றிருந்த அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. அது சம்பந்தமான ரிப்போர்டுகள் வந்திருக்கின்றன. அவற்றைப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

மத்திய சிறையில் கைதிகள் தப்பியோடுதல்

* 52 வினா.—**திரு. ஆ. கு. சுப்பையா:** மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மத்திய சிறையில், தண்டனை அனுபவித்து வரும் கைதிகள் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் சிறைக் கதவை உடைத்து வெளியேறியது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்குரிய காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, ஏப்ரல் மாதம் இரண்டு கைதிகள் சிறைக் கூரைமீது ஏறிக்கொண்டு, அமைச்சர் வந்தால்தான் இறங்குவோம் என்று சொன்னது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இரண்டு ஆயுட்கைதிகள் அப்படிப் பட்ட போராட்டத்தில் ஈடுபட்டது உண்மை.

SRI K. VINAYAKAM : Sir, may I know whether the Government have instituted an enquiry about the grievances of the two persons who got on top of the jail building and if so, what are their grievances and have they been redressed?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைப் பற்றி விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையில் கைதிகள் சிலர் தாக்கப்பட்டார்கள் என்று தெரியவந்தது. தொடர்ந்து விசாரணை நடக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அந்தக் கைதிகள் தாக்கப் பட்டார்கள் என்கிற முடிவை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறதா? அதன் பேரில் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் வந்தவுடன் உத்தரவு போட்டு, அது விசாரணையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவடைந்தன.